Judicial Form No.53
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, POCHAMPALLI.

Case No. MC.9/2023
Witness for Prosecution : RW1
Name ஞானசேகரன் Taluk :
Father's / Husband Name ராஜா Calling :
Village பாவக்கல் Age :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 08.05.2026

மனுதாரர் ஆஜர். மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> :**

1) 2 ஆம் மனுதாரரான நந்தினிக்கு திருமண சமயத்தில் எவ்வளவு நகை கொடுக்கப்பட்டது என்றால் எவ்வளவு என்று தெரியாது, எனக்கு போட்ட நகைகள் மட்டுமே எனக்கு தெரியும். திருமணத்தின் போது 2 ஆம் மனுதாரரான நந்தினிக்கு வரதட்சனையாக நகை போட்டார்களா என்றால் போட்டார்கள். எந்த எந்த நகைகள் என்றோ, அதனை மனுதாரர் என்னுடைய வீட்டிற்கு கொண்டுவந்ததுள்ளாரா என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2) நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் 2 வது பத்தியில் 2 ஆம் மனுதாரர் 15 பவுன் நகைகள் போட்டனர் என்பது பொய் சங்கதி என்று குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் 3 வது பத்தியில் அவருக்கு கொடுத்த நகைகள் மற்றும் பொருட்களை எடுத்து சென்றுவிட்டார் என்று குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு திருமணத்தின் போது 2 ஆம் மனுதாரரின் பெற்றோர் 1 –1/2 பவுன் பிரைஷ்லைட், 1– 1/2 பவுன் செயின், 1/2 பவுன் மோதிரம் மற்றும் Hero Xtreme என்ற இருசக்கர வாகனம் ஆகியவற்றை எனக்கு வாங்கி கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

3) எனக்கு திருமணத்தின் போது போட்ட நகைகள் என்னிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல, அவர்களே எடுத்து சென்றுவிட்டனர். நான்

தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் எனக்கு நகைகள் போட்டது உண்மை என்றும், அதனை அவர்களே எடுத்து சென்றுவிட்டார்கள் என்றும் குறிப்பிட்டு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. திருமணத்தின் போது நான் AR காவலராக இருந்தேன் என்றால் சரிதான். நான் AR காவலராக பணியில் இருப்பதினால் 2 ஆம் மனுதாரரின் பெற்றோர்கள், அவர்களது சக்திக்கு மீஞ்சி திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் சரியல்ல.

4) 2 ஆம் மனுதாரரின் பெற்றோர்கள் அவர்களது சக்திக்கு மீறி திருமணம் செய்து வைத்ததனால் தற்போது கடனாளியாக உள்ளனர் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பின்பு பதவி உயர்வு பெற்று கிருஷ்ணகிரி கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு வந்துள்ளேன் என்றால் பணி உயர்வு பெறவில்லை, பணி மாறுதல் மட்டுமே பெற்று கிருஷ்ணகிரி மாவட்டத்தில் AR காவலராக உள்ளேன். நான் தற்போது Regular காவலராக உள்ளேன் என்றால் சரிதான். AR காவலராக இருந்து 10 வருடங்கள் நிறைவடைந்தால் தான் காவல் நிலையத்தில் பணி வழங்குதல் என்றால் சரியல்ல, காலியிடங்களை பொறுத்து பணி வழங்குவர்.

5) நான் தற்போது உள்ள நிலையில் இருந்து எனக்கு பணி உயர்வு உள்ளது என்றால் சரிதான். நான் கிருஷ்ணகிரியில் பணியில் இருந்தபோது வேறுவொரு பெண் காவலருடன் தொடர்ப்பு ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதன் காரணமாக தான் அந்த பெண் காவலரின் கணவர் மற்றும் 2 ஆம் மனுதாரர் என் மீது காவல் கண்காணிப்பாளரிடம் புகார் அளித்தனர் என்றால் 2 ஆம் மனுதாரர் மட்டும் புகார் அளித்தார். அது சம்மந்தமாக காவல் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார் என்றால் சரிதான்.

6) அந்த பெண் காவலர் எனக்கு உறவினர் என்பதால் காவல் கண்காணிப்பாளர் என்னை எச்சரித்தார் என்றால் என்னை எச்சரிக்கவில்லை, புகார்தாரரான 2 ஆம் மனுதாரரை மட்டும் தான் எச்சரித்தார். அந்த பெண் காவலர் எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனக்கு அத்தை மகள் ஆவார். அந்த பெண் காவலர் தற்போது எந்த காவல் நிலையத்தில் பணிபுரிகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த பெண் காவலருடன் ஏற்பட்ட தவறான உறவு முறையால் தான் 2 ஆம் மனுதாரரை குடித்து விட்டு எவ்வித காரணமும் இன்றி தகாத வார்த்தைகளால் திட்டி அடித்தேன் என்றால் சரியல்ல.

7) எனக்கும் அந்த பெண் காவலருக்கும் இடையே தொலைபேசி மூலம் போன் மற்றும் எஸ்.எம்.எஸ் மூலமாக பேசுவது வழக்கம் என்றால் சரியல்ல. நான் தற்போழுதும் அந்த பெண் காவலருடன் தான் வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல. அந்த பெண் காவலருடன் உள்ள தொடர்ப்பினால் தான் 2 ஆம் மனுதாரரை துன்புறுத்தி வீட்டை விட்டு துரத்திவிட்டேன் என்றால் சரியல்ல. 1 ஆம் மனுதாரரான எனது குழந்தைக்கு என்ன வயதாகிறது என்றால் 5 வயது ஆகிறது. என் குழந்தை 2 ஆம் மனுதாரரின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பில் உள்ளது என்றால் சரிதான்.

8) 2 ஆம் மனுதாரர் அவரது பெற்றோர் வீட்டில் கஷ்ட ஜீவினம் செய்து வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் 2 ஆம் மனுதாரரை அடித்து துன்புறுத்தி நீ எப்படி வாழ்ந்து விடுகிறாய் என்று பார்க்கிறேன் என்று மிரட்டியதால் தான் உயிருக்கு பயந்து வேறு வழியின்றி அவரது பெற்றோர் வீட்டில் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல. 2 ஆம் மனுதாரருக்கு தன்னிச்சையான வருமானங்கள் எதுவும்இல்லை என்றால் சரியல்ல, அவர் வேலைக்கு சென்றுக்கொண்டு இருக்கிறார்.

9) 2 ஆம் மனுதாரர் வேலைக்கு சென்று வருவதாக நான் சொல்லியுள்ள பொழுது அவர் எந்த வேலைக்கு செல்கிறார் என்றோ, எவ்வளவு சம்பளம் வாங்குகிறார் என்றோ, எனது பிரமாண வாக்குமூலத்திலோ அல்லது பதிலுரையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல 2 ஆம் மனுதாரர் வேலைக்கு செல்லவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 2 ஆம் மனுதாரர் வீட்டில் அவர்தான் மூத்த பிள்ளை என்றால் சரிதான், அவருக்கு 2 தம்பிகள் உள்ளனர்.

10) எனக்கு அண்ணன் இருக்கிறார் என்றால் சரிதான், அவர் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். எனக்கு எவ்வளவு சொத்து உள்ளது என்றால் எனக்கு தனிப்பட்ட சொத்துக்கள் எதுவும் இல்லை, எனது அப்பாவின் பெயரில் தான் 4-1/2 ஏக்கர் நிலம் உள்ளது. என்னுடைய அசையும், அசையா சொத்துக்கள் குறித்தும், வங்கி விவரங்கள் குறித்தும், இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் வங்கி விவரங்கள் தாக்கல் செய்துள்ளேன், எனக்கு அசையும், அசையா சொத்துக்கள் இல்லை. எனது சம்பள விவர பட்டியலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாரா உள்ளேனா என்றால் உள்ளேன்.

11) எனக்கு சம்பளமாக ரூபாய் 16,500/– வருகிறது என்று வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 1 ஆம் மனுதாரரின் தகப்பனார் என்பதாலும், 2 ஆம் மனுதாரரின் கணவர் என்பதாலும் அவர்களுக்கு போதிய வசதி இல்லை என்பதாலும் எனக்கு நல்ல சம்பளம் வருகிறது என்பதாலும் அவர்களுக்கு உணவு, உடை, இருப்பிட வசதிக்காக மனுதாரர்களுக்கு மொத்தம் 20,000/– ஜீவனாம்சம் தரவேண்டி கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலும், எதிருரையிலும் பொய்யான சங்கதிகளை கூறி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டு மறுவிசாரணை இல்லை.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct".

Sd/–M.Suriyakumar, B.A., LL.B.,
District Munsif Cum Judicial
Magistrate, Pochampalli